(ஆ) வாலாசா ஊராட்சி ஒன்றியத் தலைவர்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் 82-வது விதியின்கீழ் ஓர் அறிக்கையளிப்பார்கள்.

* மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, "வாலாசா ஊராட்சி ஒன்றியத் தலைவர் கையாடல் செய்துள்ளார். அவர் மீது போலீஸ் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை. போலீஸ் நடவடிக்கை எடுக்கும் முன்னாலே சர்க்கார் ஸ்டே கொடுக்கக்கூடிய நிலைமையைச் சொல்கிறேன்." இந்தக் கருத்துக்களை எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் இந்த மன்றத்தில் கூறியுள்ளார்கள். இந்தக் குற்றச் சாட்டுக்கு ஆதாரம் இருக்கின்றதா எனத் தலைவர் அவர்கள் கேட்டார்கள். ஆதாரம் தந்தால் நடவடிக்கை எடுக்கிறேன் என்று மாண்புமிகு முதல்வரவர்கள் இந்த மன்றத்தில் உறுதி கூறினார்கள். மு. ப. 10-00

இது சம்பந்தப்பட்ட விவரங்கள் விசாரிக்கப்பட்டது. வட ஆற்காடு மாவட்டம் அம்மூர் ஊராட்சி மன்றத் தலைவர் கையாடல் வழக்கில் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று முன்னாள் முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர் களுக்குத் தந்திவந்தது. அந்தத் தந்தியிலே உடனடியாக விசாரித்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று அண்ணா அவர்கள் 9—12—1967-ம் தேதி உத்தரவிட்டுள்ளார்கள். அதன்படி நடவடிக்கை எடுக்கப்பட்டது. அந்த ஊராட்சி மன்றத் தலைவர் 24—10—1968-ம் தேதி கைது செய்யப்பட்டார். வழக்குப் பதிவுசெய்து புலன் விசாரணை தொடங்கியது. இவர்மீது வழக்குத் தொடர்வதற்கு அரசாங்கத்தின் அனுமதியை 1958-ம் ஆண்டு பஞ்சாயத்துச் சட்டம் 169-ஆம் பிரிவுப்படி பெறுதல் வேண்டுமா வேண்டாமா என்ற சட்டப் பிரச்சினை எழுப்பப்பட்டது. இந்த வழக்குப் போன்ற பிற வழக்கு ஒன்றில் அரசாங்கம் மேற்படி 169-ஆம் பிரிவுப்படி நடவடிக்கை எடுத்ததை எதிர்த்து உயர்நீதி மன்றத்தில் அரசாங்கத்தின்மீது வழக்குப் போடப்பட்டிருந்தது. அந்த வழக்கில் அரசாங்கத்தின் அனுமதியில்லாமல் கிரிமினல் வழக்குப் போட லாம் என்று 22—7—1969-ம் தேதி தீர்ப்பளிக்கப்பட்டது. உயர்நீதி மன்றத்தில் இந்தச் சட்டப் பிரச்சினை பரிசீலனையில் இருந்ததால் அரசாங்கம் அனுமதி கொடுக்க இயலவில்லை. இந்தத் தீர்ப்புக் கிடைத்ததற்குப் பின்னர் மேற்படி வாலாசா பஞ்சாயத்து யூனியன் தலைவர்மீது கிரிமினல் வழக்கை நடத்தும் படி உத்திரவிட அரசாங்கம் அண்மையில் முடிவெடுத்துள்ளது. போலீஸ் நடவடிக்கை எடுக்கவில்லையென்றும், அரசாங்கம் தடையுத்திரவு பிறப்பித் துள்ளதென்றும் எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் கூறியது முற்றிலும் தவறான தகவல்களாகும். ஆதாரமில்லாமல் உண்மைக்குப் புறம்பான குற்றச் சாட்டு களை அரசாங்கத்தின்மீது எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இந்த மன்றத்தில் கூறியது வருந்தத்தக்கதாகும்.

(3) அறிக்கை அளித்தல்.

எழுதுபொருள் அச்சுத்துறை பற்றிய மதிப்பீட்டுக் குழுவின் அறிக்கை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, திரு. எ.வி.பி. ஆசைத்தம்பி அவர்கள் மதிப்பீட்டுக் குழுவின் அறிக்கையை அளிப்பார்கள்.

திரு. ஏ. வி. பி. ஆசைத்தம்பி : தலைவர் அவர்களே, எழுதுபொருள், அச்சுத் துறை பற்றிய மதிப்பீட்டுக் குழுவின் அறிக்கையை பேரவைமுன் வைக்கி றேன்.

திரு. பி. ஜி. கருத்திருமன் : 81-வது விதியின்கீழ் அறிக்கை கொடுக்க இருக்கிறேன் . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நாளை அல்லது மறுநாள் செவ்வாய்க்கிழமை எடுத்துக்கொள்கிறேன் என்று சொல்லியிருக்கிறேன். எனவே நாளைக்கு எடுத்துக்கொள்கிறேன்.

(4) 1970-71-ஆம் ஆண்டுக்கான நிதிக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு—

கோரிக்கை எண் 25—பழங்குடிமக்கள் அரிசனங்கள், ஏனைய பின்தங்கிய வகுப்பினர் நலன்.

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின்மேல், கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன் :—

"நிதிக் கோரிக்கை எண். 25—பழங்குடி மக்கள், அரிசனங்கள், ஏனைய பின்தங்கிய வகுப்பினர் நலன் * என்ற தலைப்பின்கீழ் ரூ. 8,85,17,900-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

THIRU K. VINAYAKAM : Sir, to discuss the policy and the desirability of giving as much facilities in the field of "Education" and "Government appointments" to the Backward Classes as given to the Scheduled Classes, I move the cut motion standing in my name—

That the allotment of Rs. 8,85,17,900 under Demand No. 25–Welfare of the Scheduled Tribes, Castes and other Backward Classes—be reduced by Rs. 100.

திரு. என். வரதராஜன் : தலைவர் அவர்களே, தாழ்த்தப்பட்ட மக்கள், பிற்பட்ட மக்கள் ஆகியோர் சிறுதொழில்கள் நடத்தக் கடன் வழங்குவது, அல்லது கூட்டுறவு முறையில் நடத்த உதவுவது, அத்தொழில்களில் உற்பத்தியாகும் பொருள்களைச் சர்க்காரே கொள்முதல் செய்து மாநில அரசு விற்பனை நிலையம் மூலம் நியாய விலைக்கு விற்க ஏற்பாடு செய்ய வேண்டியது பற்றி விவாதிக்க—

"நிதிக் கோரிக்கை எண். 25—பழங்குடி மக்கள், அரிசனங்கள், ஏனைய பின்தங்கிய வகுப்பினர் நலன் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 8,85,17,900-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

திரு. எம். சுரேந்திரன் : தலைவர் அவர்களே, அரிசனங்களின் வீட்டுமனைகள், பாதை வசதி போன்றவைகளை ஆராய்ந்து அறிந்து, அதைத் தீர்த்து வைப்பதில் காலவரையறை நிர்ணயித்துச் செயல்பட வேண்டுமென்பதை வலியுறுத்த—

"நிதிக் கோரிக்கை எண் 25—பழங்குடி மக்கள், அரிசனங்கள், ஏனைய பின்தங்கிய வகுப்பினர் நலன் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 8,85,17,900-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

---

* 101–123-ம் பக்கங்களில் கொள்கை விளக்கக் குறிப்பு இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.